**செங்கோட்டை நகராட்சியின் அவசர கூட்டம் 06.09.2021 அன்று நடைபெற்றது**

<u>மன்றப்பொருள்</u>

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தற்பொதுது உள்ள வாகனங்களில் TN 72X 9398 – டிப்பர் லாரி மற்றும் TN76 A 9568 ஆட்டோ வாகனங்கள் முறையே **1999** மற்றும் **2005**ம் ஆண்டு வாங்கப்பட்டவைகளாகும், மேற்கண்ட இரண்டு வாகனங்களும் வாங்கப்பட்டு **15** வருடங்களுக்கும் மேலாகிவிட்டதாலும், இரண்டாம் நிலை சேகரிப்புக்காக (டிப்பர் லாரி–**1** எண்ணம், LCV–2 எண்ணம்) போதிய வாகனங்கள் உள்ளதாலும், தற்பொழுது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இரண்டு வாகனத்திற்கும் அதிகமாக செலவுகள் வர வாய்ப்புகள் உள்ளதால், TN 72X 9398 – டிப்பர் லாரி மற்றும் TN76 A 9568 ஆட்டோ வாகனங்களை கழிவு செய்திடவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிடவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; **888**/2017/ எச் **1**)

அலுவலகக் குறிப்பு ;

1. TN 72X 9398 – டிப்பர் லாரி மற்றும் TN76 A 9568 ஆட்டோ வாகனங்களை கழிவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்
2. கழிவு செய்த வாகனத்தினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிடவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

<u>மன்றப்பொருள்</u>

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன் காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் மற்றும் முத்துச்சாமி பூங்கா மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் இரண்டு குத்தகை இனமானது **31–03–2021** உடன் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் தேர்தல் நன்னடத்தை விதிகளின் காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்**5304/2021**/ஆர்**2** நாள்.**16.03.2021**ன் படி மேலும் இரண்டு மாத காலத்திற்கு கீழ்கண்ட குத்தகை இனத்தினை **2020–2021**ம் ஆண்டுக்கான குத்தகைத் தொகையில் அனுபவித்துக் கொள்ள பழைய குத்தகைதாரருக்கு உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் அனுபவித்துக் கொள்ள **26–02–2021**ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலமாகவும், மறு பொது ஏலமானது **05–05–2021, 31–05–2021, 09–06–2021, 23–06–2021, 21–07–2021, 04–08–2021, 18–08–2021** ஆகிய

தேதிகளில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் மேற்கண்ட இரண்டு குத்தகை இனத்தினை அனுபவித்துக் கொள்ள முன்வரவில்லை என்பதனை மன்றத்தின் பார்வைக்கும், மேலும் 01–09–2021ம் தேதியில் நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

01–09–2021ம் தேதி நடைபெற்ற மறு பொது ஏலம் கேள்வி ;

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரா் பெயா் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை | |
| 2 | முத்துச்சாமி பூங்கா மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமம். | | |

01–09–2021ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வி ;

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரா் பெயா் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன் காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | திரு.ஆ.சங்கா் கணேஷ், த/பெ.எஸ்.கே.ஆறுமுகம், 29, நீராத்திலிங்கம் தெரு, மேலூா், செங்கோட்டை | ரூ.1,28,500 |

| | | | |
|---|---|---|---|
| 2 | முத்துச்சாமி பூங்கா மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமம். | முஸ்தபா நாசர் எஜீகேஷனல் ஸ்போர்ட்ஸ் அகாடமி, 61, சாரல் சூப்பர் மார்க்கெட், மூன்றாவது தளம், காந்தி ரோடு, மேலபஜார், செங்கோட்டை | ரூ.4150 |

(ந.க.எண் ; 3090/2015/அ2)
அலுவலகக் குறிப்பு ;

1. இரண்டு ஆண்டு குத்தகை இனத்தினையும் 26–02–2021, 05–05–2021, 31–05–2021, 09–06–2021, 23–06–2021, 21–07–2021, 04–08–2021, மற்றும் 18–08–2021 ஆகிய தேதிகளில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை.
2. பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனக் காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 2018–2019ம் ஆண்டு நடைபெற்ற பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வித் தொகையான ரூ.1,21,500க்கு அனுபவித்துக் கொள்ள வழங்கப்பட்டநிலையில், கடந்த மூன்று ஆண்டு சராசரித் தொகையான ரூ.1,27,676 தொகையினை விட கூடுதலாக தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31–03–2024 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. முத்துச்சாமி பூங்கா மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு 2018–2019ம் ஆண்டு நடைபெற்ற பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வித் தொகையான ரூ.3700க்கு அனுபவித்துக் கொள்ள வழங்கப்பட்டநிலையில், கடந்த மூன்று ஆண்டு சராசரித் தொகையினை விட கூடுதலாகவும், முந்தைய ஆண்டு குத்தகைத் தொகையான ரூ.4079 விட கூடுதலாகவும் தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31–03–2024 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது

**செங்கோட்டை நகராட்சியின் அவசர கூட்டம் 09.09.2021 அன்று நடைபெற்றது**

<u>மன்றப்பொருள்</u>

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண்26458/2016/P1 நாள் 06.07.2021ன் படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மண்டலுத்திலுள்ள 19 நகராட்சிகளிலும் களப் பணியாளர்களை தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் அலுவலகம் மூலமாக தேர்வு செய்ய தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண் 2187/2021/ஆ2 நாள் 25–08–2021ன் படி இந்நகராட்சி சார்பில் ரு.5487 தொகையினை ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சிக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண் ; 1645/2017/ எச் 1)

அலுவலகக் குறிப்பு ;

1. வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கண்ட தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்</u>

இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநல நிதித் தொகைக்கான வட்டி மற்றும் நிர்வாகப் பங்குத் தொகை (ஒன்பது நபருக்கு) ரூ.263349/- வழங்கிட வேண்டியது, இந்நகராட்சியில் நிதி நிலை குறைபாடு காரணமாக அவ்வப்பொழுது தொகை செலுத்தாத காரணத்தினால் சொந்த நிதி ஏற்படுத்திட வழிவகை இயலாத சூழல் உள்ளது எனவே மேற்படி தொகையினை பொது நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. மேற்படி தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை ரூ.263349 வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்திலுள்ள கணிணி பிரிவு பிரிண்டர்களுக்கு HP 55A Tonnerகள் Refill செய்வதற்கு 01.09.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்பதலுக்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | Refill Tonner | Qty | ரூ |
|---|---|---|---|---|
| 1. | Empire Print Technology, Tenkasi | 55A Tonner | 1 | 500/- |
| 2. | Agni Computers Tenkasi | 55A Tonner | 1 | 700/- |
| 3. | Essar Systems,Tenkasi | 55A Tonner | 1 | 750/- |

(ந.க.எண்.730/2021/இ1)

அலுவலகக் குறிப்பு ;

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 Empire Print Technology, Tenkasi நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையின மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது

மன்றப்பொருள்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.16341/2021/இ3 நாள்.26.08.2021 சுற்றறிக்கையில் செங்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளை மூன்று இனங்களாக வகைப்படுத்தி நகராட்சி வரைபடத்தில் மூன்று வித வண்ணங்களில் குறியீடு செய்து சாலைகளுக்கு வரிசை எண் கொடுக்கவும், சாலை பதிவேட்டில் உள்ள சாலைகளை தற்பொழுது தனி நபர் மூலம் நேரிடையாக அளவீடு செய்து சாலையின் நீளம் அகலம் மற்றும் சாலையின் தன்மை குறிப்பிடவும், நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளை நகராட்சி இணைய வழியில் (கணினியில் உள்ளீடு Data Base) பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவே, மேறப்டி பணிகளை தனியார் (Consultant) மூலமாக செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) ஆகும் மேற்படி பணிகளை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

நகராட்சியின் எல்லைகள் உள்ளடக்கிய வரைபடம் நகர அளவை செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

மன்றப்பொருள்

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022ல் செங்கோட்டை நகராட்சியின் சந்தைகளை மேம்படுத்த ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.கஎண்.21326/2021/இ3 நாள்.09.09.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய சந்தைகளின் கருத்துரு சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கே.சி.ரோடு மற்றும் பம்புஹவுஸ் சாலையில் அமைந்துள்ள சந்தைகளை மேம்படுத்த ரூ.5.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை அரசின் திட்ட நிதியில் முழு மானியம் பெற்று மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மதிப்பீடு திட்ட பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு

1)அரசின் முழு மானியம் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான மண்பரிசோதனை, கட்டிட வரைபட அனுமதி கட்டணங்கள், விளம்பரக்கட்டணங்கள் மற்றும் அனைத்து விதமான இதர செலவினங்களையும் திட்ட மானியத்தில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022ல் செங்கோட்டை நகராட்சியின் சந்தைகளை மேம்படுத்த ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.கஎண்.21326/2021/இ3 நாள்.09.09.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய சந்தைகளின் கருத்துரு சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கே.சி.ரோடு மற்றும் பம்புஹவுஸ் சாலையில் அமைந்துள்ள சந்தைகளை மேம்படுத்த ரூ.5.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை அரசின் திட்ட நிதியில் முழு மானியம் பெற்று மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மதிப்பீடு திட்ட பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு

1)அரசின் முழு மானியம் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான மண்பரிசோதனை, கட்டிட வரைபட அனுமதி கட்டணங்கள், விளம்பரக்கட்டணங்கள் மற்றும் அனைத்து விதமான இதர செலவினங்களையும் திட்ட மானியத்தில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022ல் நகராட்சி பூங்காக்களை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும் பூங்காக்களை மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார்செய்து உரிய கருத்துரு அனுப்பி வைக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண் 20028/2021/தி2 நாள் 8.9.2021 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான முத்துசுவாமி பூங்காவினை மேம்படுத்த ரூ. 193.00 இலட்சத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது . இப்பணியினை அரசின் திட்ட நிதியில் முழு மானியம் பெற்று மேற்கொள்ள மதிப்பீடு திட்ட பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

1)அரசின் முழு மானியம் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022ல் மின்கட்டணத்தை சேமிக்கும் நோக்கில் நகராட்சி மின் விளக்குகளை L.E.D விளக்குகளாக மாற்றியமைக்க நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும், L.E.D விளக்குகளாக மாற்றியமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார்செய்து உரிய கருத்துரு அனுப்பி வைக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.கஎண்.35871/2014/E1 நாள்.08.09.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான 1023 மின் விளக்குகளை L.E.D விளக்குகளாக மாற்றியமைக்க ரூ. 50.00 இலட்சத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது . இப்பணியினை அரசின் திட்ட நிதியில் முழு மானியம் பெற்று மேற்கொள்ள மதிப்பீடு திட்ட பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

1)அரசின் முழு மானியம் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட இலத்தூர் சுப்பிரமணியபுரத்தில் அமைந்துள்ள உரக்கிடங்கில் Bio Mining திட்டம் செயல்படுத்துவதற்கு மேற்படி உரக்கிடங்கிலுள்ள குப்பைகளை (Total Station முறையில்) தனியால் நில அளவையாளர்கள் மூலம் நில அளவு

செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ,15000/– ஆகும். மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.969/2021/இ1)

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

**செங்கோட்டை நகராட்சியின் அவசர கூட்டம் 15.09.2021 அன்று நடைபெற்றது**

மன்றப்பொருள்

சிறப்பு சாலை திட்டம் 2020-2021 ன் கீழ் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ரூபாய் ரூ.425.00 இலட்சம் கடன் மற்றும் ரூ.75.00 இலட்சம் நகராட்சி பொது நிதி மொத்தம் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.296. நாள்.11.12.2020ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20557/2020/இ3 நாள்.14.12.2020ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 4 சிப்பங்களுக்கான பணிகளுக்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.23659/2020-28/DO2 நாள்.21.12.2020. தொழில் நுட்ப அனுமதி பெற்று உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் கடன் பொறுப்புக்கள் மிகஅதிக அளவில் உள்ளது. மேலும் நிதிநிலையில் இந்நகராட்சி மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளததால் டுபிட்கோ நிறுவனம் வாயிலாக கடன்பெறும் பட்சத்தில் கடன்தொகைகள் திருப்பி செலுத்த மிகவும் சிரமமான நிலை ஏற்படும் . எனவே நகராட்சியின் நலனைக் கருதி மேற்படி திட்டத்தின் கீழ் துவங்கப்படாமல் உள்ள சாலைகளை அரசின் வேறு ஏதேனும் ஒரு திட்ட நிதியில் முழு மானியம் பெற்று செயல்படுத்தும் பொருட்டு கீழ்காணும் சாலைப்பணிகளை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | சிப்பம் எண் | சாலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | I | டவுண் ஹால் ரோடு, வடக்கு ரத வீதி, கொட்டார ரோடு | 47.00 |
| 2. | II | கீழரத வீதி, மேற்கு ரத வீதி, வடக்கு ரத வீதி | 23.00 |
| 3. | III | அண்ணா தெரு, பள்ளிவாசல் தெரு, எஸ்.ஆர்.கே தெரு | 69.00 |
| 4. | IV | சாமியார் தெரு, வடக்கு காலசாமி கோவில் தெரு, காமாட்சி தெரு, புலவர் தெரு, ஆறுமுகசாமி ஒடுக்கம் சாலை | 118.00 |
| **மொத்தம்** | | | **257.00** |

அலுவலக குறிப்பு

1. சிறப்பு சாலைத்திட்டத்தில் 2020-2021ன் கீழ் நாளது தேதி வரையிலம் துவங்கப்படாத மேற்படி சாலை பணிகளை ரத்து செய்யலாம்.

2. அரசின் வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் முழு மானியம் பெற்று செய்ல்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது

## மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் பேட்டரி வாகனங்களில் 6 வாகனங்கள் பழுது ஏற்பட்டு இயக்க இயலத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்திட உத்தேச மதிப்பீடு ரூ,4,70,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது இப்பணியினை செய்வதற்கும் இப்பணிக்கான செலனித்தை 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020–2021 Un Tied Grant நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.7979/2020/LA3 நாள்.30.06.2021ன் படி விடுவிக்கப்பட்டுள்ள மானியத்தில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்